# கடன் சபை - 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன் சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்க என்னால் முடியாதுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2011 பெப்ரவரி 28 ஆந்திகதி அல்லது அதற்கு முன்னர் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அக்கணக்குகள் 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதி அதாவது 01 வருடம் 05 மாதங்கள் மற்றும் 22 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

சபையின் 2009 ஆம் ஆண்டுவரையான கணக்குகள் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டில் அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவரின் கையொப்பத்துடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் கணக்கு மற்றும் மாவட்ட நீதிமன்ற வழக்காளர்களின் கணக்கிற்கான பட்டோலைகள் இன்றி கடன் சபையின் இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தமையினால் ஒவ்வொரு கடன் மீதிகள் சம்பந்தமாக கணக்காய்வினைச் செய்ய முடியாதிருந்தது.

போதிலும் அந்தப் பணத்தினை அறவிடுவதனைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எதுவும் மீளாய்வாண்டின்போதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அக்கணக்குகளில் உள்ள தொகைகளுக்காக வட்டி செலுத்தும் நடைமுறையொன்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமையும் உறுதிப்படுத்தப்படவில்லை.

## 2.3 கடன் சபையைக் கலைத்தல் நடவடிக்கைகள்

கடன் சபையினைக் கலைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் கீழ் 1976 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2001 ஆம் ஆண்டு முதல் அந்நடவடிக்கைகள் அரச நிதித் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்தது. கடந்த பல வருடங்களாக ஆணையாளர்களின் சபை கூட்டப்பட்டிருக்கவில்லை.

கடன் சபையைக் கலைப்பதற்கான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படவேண்டியிருந்தன.

(அ) நடைபெறுகின்ற வழக்கு வைப்புக்களுக்காக நியாயமான பங்கிலாபம் அல்லது வட்டியினை நிர்ணயித்தல் ( 1996 முதல் பங்கிலாபம் இல்லை)

(ஆ) வீடமைப்புக் கடன் மீதிகளுக்குரிய அறவிட வேண்டியிருந்த கடன் மீதிகள் மற்றும் அம்மீதிகளுக்காக அறவிடவேண்டிய வடடியினை அறவீடு செய்தல்

(இ) 1973 இன் 33 ஆம் இலக்க கடன் சபை (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்திய கடன் சபை கட்டளைச்சட்டத்தை (அத்தியாயம் 311) கலைக்கும் நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான முறையில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மாவட்ட நீதிமன்ற வழக்காளர்களின் வைப்புக்கள்
(ஆ) பேரேட்டுக் கணக்குகளின் பேணுகை
(இ) கலைத்தல் நடவடிக்கைகள்